உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 04.08.2026 • மலர் 04 • இதழ்: 216 • செவ்வாய்    • Edition : Nagercoil • 04.08.2026 • Vol : 04 • Issue : 216 • Page : 4 • Rs. 5/-

# இளைஞர்கள் வாழ்வை போதை சீரழிக்கும்

## விழிப்புணர்வு பிரச்சாரத்தில் பிரதமர் மோடி எச்சரிக்கை



புதுடெல்லி: தற்காலிக கிளர்ச்சி தரும் போதை இளைஞர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் சீரழித்துவிடும் என பிரதமர் நரேந்திர மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் இலக்கின் ஒருபகுதியாக, போதையில்லா பாரதத்துக்கான இளைஞர் உறுதிமொழி பிரச்சாரத்தை பிரதமர் மோடி நேற்று காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: நாட்டின் எதிர்காலம் இளைஞர்களின் கைகளில் தான் உள்ளது என்பதை நன்கு உணர்ந்துள்ள எதிரி நாடுகள், தங்களின் தீவிரவாதச் செயல்களின் ஒருபகுதியாக போதைப் பொருள் விநியோகத்தைப் பயன்படுத்தி அவர்களை அழிக்கும் வேலையில் ஈடுபடுகின்றன.

போதைப்பொருள் உங்களுக்குச் சிறிது நேரக் கிளர்ச்சியைத் தரலாம்; ஆனால் அது உங்களின் ஒட்டுமொத்த தொழில், வாழ்க்கையை அடியோடு சீரழித்துவிடும். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைய,

நமது இளைஞர்கள் மனதளவிலும் உடலளவிலும் ஆரோக்கியமாகவும் தன்னம்பிக்கையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மீண்டு வெளியே வருபவர்கள் உண்மையான போராளிகள். அவர்களை அவமானப்படுத்தாமல் கவுரவித்து வாழ்க்கையில் இரண்டாவது வாய்ப்பை வழங்க வேண்டும். போதைப் பழக்கம் ஒரு தாயின் புன்னகையைப் பறிக்கிறது; தந்தையின் கனவுகளைத் தகர்க்கிறது; சகோதரியின் நம்பிக்கையைத்தளர்த்துகிறது. தன் கண் முன்னேயே குழந்தை சீரழிவதைப் பார்த்து ஒவ்வொரு குடும்பமும் இந்த வலியை அனுபவிக்கிறது.

போதைக்கு அடிமையான பிள்ளைகளை மறைக்காமல், அவர்களிடம் திறந்த மனதுடன் பேசி, மருத்துவ உதவிகளைப் பெற்றுத்தர குடும்பத்தினர் முன்வர வேண்டும்.

இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் அடுத்த 100 வாரங்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கலை, விளையாட்டு, தியானம், ஆன்மீகம், சேவை சார்ந்த பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்படும். வரவிருக்கும் 100 ஞாயிற்றுக்கிழமைகளும் போதையில்லா இந்தியாவை நோக்கி வைக்கப்படும் 100 வலுவான அடிகளாக அமையும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## காவிரியில் உரிய நீரை கர்நாடகா திறந்து விட உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு புதிய மனு

புது டெல்லி: காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் உத்தரவுகளின்படி தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடாத கர்நாடக அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: 28.07.2026 அன்று நடைபெற்ற 139வது கூட்டத்தில், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு காவிரி படுகையின் நீரியல் வானிலை சூழலை ஆய்வு செய்து, 29.07.2026 அன்று காலை 8.00 மணி முதல் 12.08.2026 வரை 15 நாட்களுக்கு பில்லிகுண்டுலுவில் வினாடிக்கு 3500 கன அடி (cusecs) வீதம் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யுமாறு கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணைகளில் இருந்து கர்நாடக அரசு தண்ணீர் திறக்க உத்தரவிட்டது.

30.07.2026 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 54வது அவசர கூட்டத்திலும் காவிரி படுகையின் நீரியல்வானிலை நிலவரம் ஆய்வு செய்யப்பட்டு, குழுவின் முடிவு உறுதி செய்யப்பட்டது. காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் உத்தரவுக்குப் பிறகு, பில்லிகுண்டுலுவில் 29.07.2026 முதல் 02.08.2026 வரை வரப்பெற்ற நீரின் அளவு வினாடிக்கு 158 முதல் 550 கனஅடி மட்டுமே.

3 ஆகஸ்ட் 2026 நிலவரப்படி, கர்நாடகாவின் கே.ஆர்.எஸ் அணையில் 23.078 டி.எம்.சி நீரும், கபினியில் 18.610 டி.எம்.சி நீரும், ஹாரங்கியில் 7.827 டி.எம்.சி நீரும், ஹேமாவதியில் 28.022 டி.எம்.சி நீரும மொத்தம் 77.537 டி.எம்.சி இருப்பு (பயன்பாட்டு நீர் இருப்பு 67.517 டி.எம்.சி) உள்ளது.

எனவே, விகிதாச்சார அடிப்படையில் பில்லிகுண்டுலுவில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீரைத் தனது அணைகளில் இருந்து திறந்து விடுவதில் கர்நாடக அரசுக்கு எந்தச்சிரமமும் இருக்காது.

இதற்கிடையே, கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அதிக மழை பெய்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால், விகிதாச்சாரப்படி பில்லிகுண்டுலுவில் தமிழ்நாட்டிற்கு கிடைக்கவேண்டிய நீரின் அளவு 26.954 டி.எம்.சி ஆகும். இதன்படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அளித்த உத்தரவான 4.536 டி.எம்.சி மிகக் குறைவாகும்.

## நாகர்கோவில் ஆட்சியர் அலுவலக பகுதியில் அழகு செடிகளை நட்ட கலெக்டர்




நாகர்கோவில், ஆக.4

நாகர்கோவில் மாநகராட்சியின் சார்பில் ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள வளைவு சாலை பகுதியினை சீர்படுத்தும் வகையில் அலங்கார செடிகள் நடும் பணி நேற்று நடைபெற்றது. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆர்.ஐஸ்வர்யா முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் செடிகள் நடும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது:

மரம் நடுவோம் மழை பெறுவோம் என்ற உன்னதமான நோக்கத்துடன், நாகர்கோவில் மாநகராட்சியை மேலும் எழில்மிகு, தூய்மையான மற்றும் இயற்கை வளமிக்க மாநகரமாக மாற்றும் நோக்கில் விரிவான நகர்ப்புற பசுமையாக்கல் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் பிரதான சாலை ஓரங்கள், பூங்காக்கள், பொது இடங்கள், அரசு அலுவலக வளாகங்கள் மற்றும் ஏரிக்கரைகளில் நிழல் தரும் மரங்கள் மற்றும் பயனுள்ள மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்கவும், மழைப்பொழிவை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் பொதுமக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் குறைந்தபட்சம் ஒரு மரமாவது நட வேண்டும்.

இத்திட்டம் வெறும் அரசு திட்டமாக மட்டும் இல்லாமல், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து ஒரு மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல வேண்டும். இயற்கை நமக்குக் கொடுத்த 'பசுமை நகரம்! தூய்மை நகரம்! நிலையான எதிர்காலம்!' என்ற இலக்கை அடைய நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட மக்கள் அனைவரும் மாநகராட்சியுடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

## தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 464 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, மனுக்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்தி பட்டா, மகளிர் உரிமைத்தொகை, தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை மற்றும் இதர பல்வேறு மனுக்கள் என 415 மனுக்களும், மூத்த குடிமக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரத்யேக இடத்தில் மூத்த குடிமக்களிடமிருந்தும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 14 மனுக்களும், மாற்றுத் திறனாளிகளை நேரில் சந்தித்து அவர்களிடமிருந்து 35 மனுக்கள் என மொத்தம் 464 மனுக்களை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மூ. குருச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் / தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம்(பொ) விஜயா, உதவி ஆட்சியர் பயிற்சி பாட்டீல் கிருஷ்ணா பபுருவான், உதவி இயக்குநர்கள் ஊராட்சிகள் சாந்தி, சந்திரசேகர், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் காமாட்சி மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள்குறைதீர்க்கும்நாள்கூட்டம்கலெக்டர்ரேவதிதலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 410மனுக்களை பொது மக்கள் கலெக்டரிடம் வழங்கினார் கள் .இந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்

அதனைத் தொடர்ந்து மக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தஞ்சாவூர் தெற்கு தெரு பகுதியினை சேர்ந்த விஜயன் திருஞானம் என்பவர் துபாயில் பணிபுரிந்து இருந்தது எடுத்து அவருக்கு சேர வேண்டிய சட்டப்படியான நிலுவைத் தொகை ரூபாய் 4,04,886 க்கான காசோலையினை அவரது மனைவி குமாரி அவர்களிடம் மாவட்ட கலெக்டர் ரேவதி வழங்கினார்

இந்தக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இளங்கோவன், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்

## நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாகர்கோவில், ஆக.4

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று 3. ம் தேதி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத் திறனாளி நல உதவித் தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகள் கோரி 367 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு எளிதில் தீர்வு காணும் நோக்கில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாற்றுத் திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் மாற்றுத்திறன் பயனாளிகளின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்மு.வேலுமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) பத்மபிரியா, தனித்துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்பு திட்டம்) சரவணன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## கன்னியாகுமரியில் வாலிபரை ஓட ஓட வெட்டி கொலை முயற்சி; 4 பேர் கைது

கன்னியாகுமரி, ஆக.4

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் பிச்சிவிளை பகுதியை சேர்ந்தவர் தோமையார் மகன் முத்துவீரன் (20). இவர் தற்போது கன்னியாகுமரி அருகே நாச்சியார் குளத்தங்கரை பகுதியில் வசித்து வருகிறார். இந்த நிலையில் அதே பகுதியை சேர்ந்த மணி மகன் மதுரைவீரன் என்பவர் கடந்த சில தினங்கள் முன்பு கொலை செய்யப்பட்டார். இந்த கொலையில் தோமையாருக்கு தொடர்பு உள்ளதாகவும், அதனால் அவர் மீது மணியின் மகன்கள் சத்யா (26), பரமசிவம் (22), சுப்பையா (24), மணிகண்டன் (19) ஆகியோர் கோபத்தில் இருந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முத்துவீரன் கன்னியாகுமரி விவேகானந்தபுரம் ரவுண்டானா பகுதிக்கு வந்தார். அப்போது அங்கு சரக்கு வாகனத்தில் அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் சத்யா, பரமசிவம், சுப்பையா, மணிகண்டன் மற்றும் சிலர் வந்துள்ளனர்.

பின்னர் அவர்கள் வாகனத்தில் இருந்து குதித்து அங்குநின்ற முத்துவீரனை வழிமறித்து தங்களது சகோதரன் கொலையில் உனது தந்தைக்கு தொடர்பு உள்ளது என்றும், தங்களது சகோதரன் சென்ற இடத்திற்கு நீயும் போ எனக் கூறி ஆயுதங்களால் அவரை தாக்கினர்.

உடனடியாக முத்துவீரன் அங்கிருந்து ஓடத் தொடங்கினார். ஆனால் அந்த கும்பல் அவரை தொடர்ந்து துரத்தி சென்று கழுத்தில் வெட்ட முயன்றனர். ஆனால் முத்துவீரன் விலகிக் கொண்டதால் தோள்பட்டையில் வெட்டு விழுந்தது. இதை கண்ட அக்கம்பக்கத்தினர் அங்கு குவிந்ததால், கும்பல் அங்கிருந்து தப்பி சென்றது

அரிவாள் வெட்டில் பலத்த காயம் அடைந்த முத்துவீரன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து கன்னியாகுமரி போலீசார் வழக்கு பதிவு செய்து கொலை செய்ய முயன்ற சத்யா, பரமசிவம், சுப்பையா மற்றும் மணிகண்டன் ஆகியோரை கைது செய்தனர். இந்த சம்பவம் கன்னியாகுமரியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## கன்னியாகுமரி நகராட்சி கூட்டம் முக்கடல் சங்கமத்தில் 50 அடி உயர தேசிய கொடி அமைக்க தீர்மானம்



கன்னியாகுமரி, ஆக.4

கன்னியாகுமரி முக்கடல் சங்கமம் பகுதியில் 50 அடி உயரத்தில் தேசியக்கொடி அமைக்க அனுமதி கேட்டு, நகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கன்னியாகுமரி நகராட்சி அவசர கூட்டம் தலைவர் குமரி ஸ்டீபன் தலைமையில் நேற்று நடைபெற்றது. நகராட்சி கமிஷனர் பட்டுசாமி, கவுன்சிலர்கள் சி.எஸ். சுபாஷ், லிங்கேஷ்வரி, சுஜா, நித்யா, பூலோகராஜா, சிவசுடலைமணி, இக்பால், சகாயசர்ஜினாள், டெல்பின், ஆனிரோஸ், ஆட்லின், வினிற்றா, இந்திரா நியமன கவுன்சிலர் ஆரோக்கிய அம்மாள் நகரமைப்பு ஆய்வாளர் ஷேக் அப்துல் காதர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில், கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சாலை மற்றும் சூரிய அஸ்தமன சாலையில் கடற்கரை அழகுபடுத்த வேண்டும். நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க வேண்டும்.

பழைய பேரூராட்சி அலுவலக வளாகத்தில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க வேண்டும். முக்கடல் சங்கமம் பகுதியில் 24 மணி நேரமும் பறக்கும் வகையில் தேசிய கொடிக்கம்பம் அமைக்க மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# ஒகேனக்கல்லில் ஆடிப்பெருக்கு விழா 1910 பயனாளிகளுக்கு ரூ.19.63 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் ராஜ்குமார் வழங்கினார்

தருமபுரி ஆகஸ்ட் 04

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் ஒகேனக்கல்லில் தமிழ் நாடுஅரசுசுற்றுலாத்துறை சார்பில் ஆடிப்பெருக்கு விழா மூன்று நாட்கள் கொண்டாடப்படுகிறது. இந்தவிழாவின்தொடக்க நிகழ்ச்சி ஒகேனக்கலில் நடைபெற்றது. விழா விற்கு ஆட்சியர் சரவ ணன் தலைமை தாங்கி னார். பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் கஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண்கபிலன், த வெ க மாவட்டச் செயலாளர் சிவன் ஆகியோர் முன் னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலு வலர் கவிதா வரவேற் புரை யாற்றினார். தமிழக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் ராஜ்குமார் குத் துவிளக்கேற்றி ஆடிப்பெ ருக்கு விழாவை தொட ங்கி வைத்தார்.

தொடர்ந்து பல்வேறு துறைகளின் சார்பில் ரூ. 7.48 கோடி மதிப்பீட்டில் 23 முடிவுற்ற திட்ட பணி களை தொடங்கி வைத் தார். பின்னர் பல்வேறு துறைகளில் சார்பில் 1,910 பயனாளிகளுக்கு ரூ.19.63 கோடி மதிப்பீட் டில் அரசு நல திட்ட உத விகளை வழங்கினார். தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அர சின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க புகைப்பட கண்காட் சியை அமைச்சர் திறந்து வைத்து பார்வையிட் டார். பின்னர் 23 துறைக ளின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள பல்துறை பணி விளக்க கண்காட்சி அரங் குகளை அமைச்சர் ராஜ்கு மார் திறந்து வைத்து பார் வையிட்டார். இந்த விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மதுமதி, உதவி ஆட்சியர் ஜார்ஜ், ஆட்சியரின் நேர்முக உத வியாளர் கவிதா, கலை பண்பாட்டுத்துறை உதவி இயக்குனர் சங்கரராமன், பென்னாகரம் பேரூ ராட்சி தலைவர் வீரமணி, உதவி சுற்றுலா அலுவலர் லலிஷா மற்றும் அனைத்து துறை அலுவ லர்கள், ஊராட்சி அமைப் புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஓட்டப்பிடாரம் வட்டம் மேல மீனாட்சிபுரம் ஸ்ரீ பேச்சியம்மன் ஸ்ரீ சுடலைமாடசுவாமி திருக்கோவில் கோவில் கொடை விழா

## முதலாம் ஆண்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம்



தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் மேல மீனாட்சிபுரம் ஸ்ரீ பேச்சியம்மன் ஸ்ரீ சுடலை மாடசுவாமி திருக்கோவில் கோவில் கொடை விழாவை முன் னிட்டு முதலாம் ஆண்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் மேல மீனாட்சிபுரம் முதல் குறுக்கு சாலை ரோடு வரை நடைபெற்றது . இந்த மாட்டு வண்டி போட்டியை திமுக ஒன் றிய கழக செயலாளர் வீ. காசி விஸ்வநாதன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார் . தொழிலதிபர் எப்.ஏ சுதா கர் .ஓட்டப்பிடாரம் தவெ கஒன்றிய செயலாளர் ஆறுமுககிருஷ்ணன் .திமுக மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் வீ . ராதாகிருஷ்ணன் தவெக செயற்குழு உறுப் பினர் ராதாகிருஷ்ணன்ஆ கியோர் முன்னிலை வகித் தனர்.இந்த மாட்டு வண்டி போட்டியில் தேன் சிட்டு காளைகள் 25 ஜோடிக ளும் பூஞ்சிட்டு காளைகள் 39 ஜோடிகளும் கலந்து கொண்டது .பூஞ்சிட்டு காளைகள் இரண்டு வகை யாக பிரிக்கப்பட்டு முத லில் 20 ஜோடிவண்டிக ளும் இரண்டாவது 19 ஜோடிவண்டிகளும் போட்டியில் கலந்து கொண்டது. பூஞ்சிட்டு காளைபோட்டியில் முதல் பரிசை மேட்டூர் அழகர் பெருமாள் காளை யும் ,இரண்டாவது பரிசை ஆர்தனை ஏசு வேலாயுதபு ரம், மூன்றாம் பரிசினை ஞானமுத்து தமிழன்னை வேலாயுதபுரம் நான்காம் பரிசினை கச்சேரி தள வாய்புரம் கனக பிரியா காளையும் பூஞ்சிட்டு காளை இரண்டு வகை யாக பிரிக்கப்பட்டதில் முதல் பரிசை சிவகங்கை மாவட்டம் சிதம்பரஅம்ப லம் இரண்டாவது பரிசை சங்கரப்பேரி பி. கருத்தப் பாண்டி காளையும் மூன் றாம் பரிசு ஜக்கம்மாள்பு ரம் பரணிச்செல்வம் காளையும் நான்காவது பரிசை கச்சேரி தளவாய்பு ரம் கருமாரியம்மன் காளையும்பெற்றது.தேன் சீட்டு காளையில் முதல் பரிசை தேனி மாவட்டம் கூடலூர்வனராஜா. இரண் டாம் பரிசை கொடிக்கு ளம் எ.கே. எம். கிருஷ்ண மூர்த்தி புதுக்கோட்டை காளையும் மூன்றாம் பரி சினைவைப்பார் மணிக லா காளையும் நான்காம் பரிசினை ஒற்றை வீடுபர மசிவன் காளையும் பரி சினை வென்றது. இப் போட்டியில் வெற்றி பெற்ற காளைகளுக்கு முதல் பரிசுரூ 25001 ஓட் டப்பிடாரம் திமுக ஒன் றிய செயலாளர் வீ.காசி விஸ்வநாதன் வழங்கி னார் . இரண்டாம் பரிசு ரூ 20001தொழிலதிபர் FA சுதாகர் வழங்கினார் .மூன் றாம் பரிசு ரூ 15001 கே. வன்னியபெருமாள், கச் சேரி தளவாய்புரம் எஸ். கலைச்செல்வம், மேல மீனாட்சிபுரம். நான்காம் பரிசு ரூ 5001குறுக்குச் சாலையைச் சேர்ந்த லட்சு மணன் பெரிய நத்தத்தைச் சேர்ந்த பாலா ஆகியோர் வழங்கினர் . தேன்சிட்டு காளைகளுக்கு காண முதல் பரிசு ரூ 20001தொகையினை ஓட் டப்பிடாரம் தவெக ஒன் றிய செயலாளர் ஏ. டி .கே .ஆறுமுக கிருஷ்ணன் வழங்கினார் .இரண்டாம் பரிசு ரூ 15001 கீழ மீனாட் சிபுரம் பி. கந்தசாமி மற் றும் குடும்பத்தினர் வழங் கினார்கள். மூன்றாம் பரிசு ரூ 10001 தொகையினை மேல மீனாட்சிபுரம் எஸ் குட்டி ராஜன்., வி.ரமேஷ், வழங்கினர் . நான்காம் பரிசு ரூ 4001 தொகை யினை புதியம்புத்தூரை சேர்ந்த சிலம்பரசன் . தூத் துக்குடியை சேர்ந்த கருப் பசாமி, ஆகியோர் வழங் கினார் . நிகழ்ச்சி ஏற்பாட்டினை நாகராஜ் ,கக்கரம் பட்டி எஸ். கலைச்செல்வம்,கோவில் நிர்வாகி மேல மீனாட்சிபுரம் மற்றும் விழா கமிட்டியாளர்கள் ஊர் பொதுமக்கள் ஆகி யோர் சிறப்பாக செய்து செய்திருந்தனர்.



விடுதலைப்போராட்ட வீரர் மாவீரன் தீரன்சின்னமலையின் நினைவு ஆடிப்பெருக்குவிழா 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்டம், அறச்சலூர் ஓடாநிலையில் அமைந்துள்ள மாவீரன் தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி, பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி. விஜயலட்சுமி, கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்செல்வன் ஆகியோர் நேற்று மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சத்தியபாமா, (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த் மோகன், (மொடக்குறிச்சி) டி.சண்முகன், (பவானிசாகர்) வி.பி. தமிழ்ச்செல்வி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# மிட்டாநூல அள்ளி ஆஞ்சநேயர் திருக்கோவிலில் ஆடி 18 திருவிழா



தருமபுரி,ஆக.04

தருமபுரி மாவட்டம் மிட்டா நூல்அள்ளி மட்டி கான் தோப்பில் அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ மகா கணபதி ஸ்ரீ வீரமணி கட்டி ஆஞ்சநேயர் சஞ் சீவ் வீர ஆஞ்சநேயர் திருக்கோவிலில் ஆடி பதினெட்டாம் நாள் திரு விழாவெகுவிமர்சையாக நடைபெற்றது இந்த விழாவையொட்டி காலை 10 மணி அளவில் கங்கைபூஜை பூங் கரகம் அம்மன் கரகம் பால்கு டம் எடுத்து பம்பை வாத் தியம் முழங்க ஊர்வல மாக ஆஞ்சநேயர் கோவிலை வந்து அடைந் தனர் இதைத்தொடர்ந்து மதியம் சாமிக்கு சிறப்பு அபிஷேகங்கள் ஆராத னைகள் அலங்கார பூஜை நடைபெற்றது இதில் மாவட்டத்தில் உள்ளி பல் வேறு பகுதியிலிருந்து பக் தர்கள் பொதுமக்கள் திர ளாக கலந்து கொண்டு ஆஞ்சநேயரை வழிபட்ட னர் திருக்கோவில் சார் பில் அனைவருக்கும் அன் னதானம் வழங்க ப்பட்டது

இவ்விழாவிற்கான ஏற் பாட்டினை விழா குழுவி னர் சிறப்பாக செய்திருந் தனர்.



# திருப்பூர் மத்திய மாவட்ட திமுக அலுவலகத்தில் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை

திருப்பூர் ஆக.04

திருப்பூர் மத்திய மாவட்ட திமுகஅலுவலகத்தில் தீரன் சின்னமலை நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை கழக நிர் வாகிகளுடன்செலுத்தப்பட்டது.

மத்தியமாவட்டக் கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது..

# முக்கல்நாயக்கன்பட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவிலில் 22ஆம் ஆண்டு பூமிதித்தல் திருவிழா



தருமபுரி ஆகஸ்ட் 04

தருமபுரி மாவட்டம், முக்கல்நாயக்கன்பட்டியில் அமைந் துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ துர்காளியம்மன், ஸ்ரீமாசாணியம்மன்திருக்கோவில்களின் 22ஆம் ஆண்டு ஆடி 18 பூமிதித்தல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவையொட்டி அதிகாலையில் மூலவருக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடை பெற்றது. இதை தொடர்ந்து ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ துர்காளியம்மன், ஸ்ரீ மாசாணியம்மன் ஆகிய அம்மன்க ளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, கங்கை பூஜை, பால்குடம் எடுத்தல், அலகு குத்துதல், காவடி எடுத்தல், தீச்சட்டி ஆகியவைகளை எடுத்துக்கொண்டு பக்தர்கள் ஊர்வலமாக வந்து பூ மிதித்து நேர்த்திக்கடன் செலுத்தி னர்.இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர். திரு விழாவில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். திருக்கோவில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# தாயுமானவர் திட்டம்: முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடி ரேஷன் பொருட்கள் விநியோகம்



முதலமைச்சரின் தாயு மானவர் திட்டத்தின் கீழ் 70 வயதுக்கும் மேற்பட்ட முதியோர் மற்றும் மாற் றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைதாரர்க ளின் இல்லத்திற்கு அத்தி யாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யும் பணியினை நியாயவிலைக் கடை பணியாளர்கள் மூலம் மாதந்தோறும் வாகனங்க ளில் பொருட்களை எடுத் துச் சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத் தில் 70 வயதிற்கு மேற் பட்ட தகுதியுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற் றுத்திறனாளி உறுப்பினர் கள் கொண்ட 48219 குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தாயுமானவர் திட்டத்தின் கீழ் பொருட்களை வழங் கும் வகையில் "ஆகஸ்ட் 4 மற்றும் 5ஆம் தேதிக ளில்" தகுதியுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற் றுத்திறனாளிகளின் இல் லத்திற்கே சென்று அத்தி யாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது என தெரிவிக்கப் படுகிறது.

எனவே, மேற்படி திட் டத்தின் கீழ் தகுதிவாய்ந்த குடும்ப அட்டைதாரர்கள் இத்திட்டத்தினை பயன்ப டுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறது.

# கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆடி களப பூஜை தொடக்கம்



கன்னியாகுமரி,ஆக.4

பிரசித்தி பெற்ற கன்னியா குமரி பகவதி அம்மன் கோவிலில் நேற்று ஆடி களப பூஜை தொடங்கி யது. வருடம் தோறும் ஆடி மாதம் களப பூஜை 12 நாட்கள் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான களப பூஜை நேற்று தொடங்கி யது திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் அதன் மடாதிபதி திருக்கைலாய பரம்பரை 24வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பர மாச்சாரிய சுவாமிகள் கோவிலுக்கு வழங்கிய தங்க குடத்தில் வாசனை திரவியங்கள் நிரப்பி பூஜைகள் நடத்தப்பட் டது.இந்தகளபபூஜையை மணலிக்கரை மாத்தூர் மட தந்திரி சஜித் சங்கர நாராயணரு நடத்தினார். தங்கக் குடத்தினால் அம் மனுக்கு களபாபிஷேகம் நடைபெற்றது

அம்மனுக்கு பல வகையான அபிஷேகங் கள் செய்யப்பட்ட பின்பு வைர கிரீடம் வைரக்கல் மூக்குத்தி மற்றும் தங்க ஆபரணங்கள் அணிவிக் கப்பட்டு சந்தனகாப்பு அலங்காரத்துடன் அம் மன் அருள்பாலிக்கும் நிகழ்ச்சி நடந்தது. காலை 4.30 மணிக்கு நடை திறந்து. தொடர்ந்து நிர் மால்ய பூஜை விஸ்வரூப தரிசனம் அதனைத் தொடர்ந்து 6 மணிக்கு அபிஷேகம் 10 மணிக்கு சிறப்பு களபாபிஷேகம் 11.30 மணிக்கு அலங்கார தீபாராதனை நடைபெற்றது.

இதில் திருவாவடுதுறை ஆதீனம் திருக்கயிலாய பரம்பரை 24வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பர மாச்சாரிய சுவாமிகள், நாகர்கோவில் தேவசம் தொகுதி கண்காணிப்பா ளர் ஜெயசுதா, பகவதி அம்மன் கோவில் மேலா ளர் ஆனந்த், திருவாவடுதுறை ஆதீன நெல்லை மண்டல மேலா ளர் ராமச்சந்திரன், சுசீந்திரம் திருவாடுதுறை ஆதினகிளைமட ஆய்வா ளர் வீரநாதன் உட்பட திர ளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மாலை 6.30 மணிக்கு சாயரட்சை தீபாராதனையும் இரவு 7 மணிக்கு அம்மனுக்கு புஷ்பாபிஷேகம் நடந்தது இரவு 8.30மணிக்கு அம் மன் வெள்ளி பல்லக்கில் எழுந்தருளச் செய்து கோவிலின் உள் பிரகா ரத்தை சுற்றி மேளதாளம் முழங்க மூன்று முறை வலம் வரச் செய்யும் நிகழ்ச்சியும் நடந்தது அதன்பிறகு வெள்ளி சிம் மாசனத்தில் அம்மனுக்கு தாலாட்டு நிகழ்ச்சியும் அதைத் தொடர்ந்து அத் தாழ பூஜையும்,ஏகாந்த தீபாராதனையும் நடந் தது. வருகிற 14ம் தேதி களப பூஜை நிறைவடைகிறது. தொடர்ந்து 15ம் தேதி காலை 10 மணிக்கு உத யாஸ்தமன பூஜை மற்றும் அதிவாசஹோமம் நடை பெறுகிறது.



மதுரை மாவட்டத்தில் தமிழக முதலமைச்சர் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 43 வது வார்டு சார்பாக ஹரி ராமகிருஷ்ணன் அவர்களது தலைமையில் ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன இந்த நலத்திட்ட உதவிகளை மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் கோபிசன் அவர்கள் வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழக பேச்சாளர் மாநில தலைமை கழக பேச்சாளர் அபிஜித் மகிமா அவர்கள் சிறப்புரை ஆற்றினார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சரவணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார் மாநில மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர் இந்த நலத்திட்ட விழாவில் சில்வர் அண்டா மற்றும் சேலை உள்ளிட்ட ஏராளமான சுமார் 1000 பேருக்கு சிறப்பாக வழங்கப்பட்டது

# மஜக திருப்பூர் மாவட்ட செயலாளர் பிராண்டு ஹக்கீம் இல்லத் திருமண விழா!!



பல்லடம்: ஆகஸ்ட் 04

மஜக திருப்பூர் மாவட்ட செயலாளர்பிராண்டு ஹக் கீம் இல்ல திருமண விழா வில் மணமக்களைவாழ்த் தினார்கள்

மஜக மாநில பொதுச் செயலாளர் எஸ்.எஸ். ஹாரூன் ரசீது திருப்பூர்மாநகர்மாவட்ட செயலாளர் தெற்கு தொகுதி MLA எஸ். பாலமுருகன் திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஜி.கே.சங்கர் விஜிலன்ஸ் பத்திரிகை நிர் வாகிகள். திருப்பூர் தெற்கு தொகுதி கொள்கை பரப்பு அணி அமைப்பாளர் எஸ். காதர்மீரான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பித்தார்கள்.

விழாவில் பல் சமய நட் புறவு கழகத்தின் தலைவர் ஷாஜஹான், தமிழ் மாநில மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் முத்து முஹம் மது, த.வெ.க.மாவட்ட இணைச் செயலாளர் சுகு மார்,மாவட்ட இளைஞ ரணி செயலாளர் அப் பாஸ்,மாவட்டத்துணைச் செயலாளர் கார்த் திக்,வடக்கு பகுதி செய லாளர் விஜயகுமார், த. வெ.க.நிர்வாகிகள்பாண் டியன், அமர்நாத், மோகன்,சாமி, பல் சமய நட்புறவு கழகம் நிர்வா கிகள்மாவட்ட துணை தலைவர் நூர் முக மது,மாவட்ட கழக பேச் சாளர் கருப்பச்சாமி பாண்டி ,மாவட்ட துணைச் செயலாளர் அர் ஷத் அலி, வடக்கு இளைஞர் அணி செயலாளர் ரபீக், பல்ல டம் ஒன்றிய தலைவர் உபைதுர் ரஹ்மான்,கேப் டன் பாபு,மஜக, பல் சமய நட்புறவு கழகம், நிர்வாகி களும் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக் களை வாழ்த்தி சிறப்பித்தார்..

# இரணியல் அருகே நர்சிங் மாணவர் தூக்கிட்டு தற்கொலை

இரணியல், ஆக.4

இரணியல் அருகே உள்ள கண்டன்விளை அடுத்த இலுப்பவிளை என்ற இடத்தை சேர்ந்த வர் ரங்கன் மகன் சஞ்சய் (19). சஞ்சய் சென்னை யில் உள்ள ஒரு பிரபல தனியார் மருத்துவமனை யில் நர்சிங் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். வெளியூர் தங்கி நின்று படிக்கவிருப்பம் இல்லை என்று பெற்றோர் இடம் கூறியதாக தெரிகிறது.

இந்த நிலையில் தற் போது ஊருக்கு வந்தவர்



நேற்று முன்தினம் மாலை வீட்டுக்கு வெளியே உள்ள ஒரு தனியார் தோட் டத்தில் உள்ள மரத்தின் நைலான் கயிறு மூலம் தூக்கு போட்டு உயிருக்கு போராடி கொண்டு இருந் தார். அக்கம் பக்கத்தி னர்கள் அவரை மீட்டு குமரி அரசு மருத்துவ கல் லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டார்.

மருத்துவர்கள் பரிசோ தனை செய்து விட்டு வழி யிலேயே சஞ்சய் இறந்து விட்டதாக கூறினார்கள். இது குறித்து இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக் டர் முத்து கிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வரு கின்றார்.

# சுசீந்திரம் தாணு மாலைய சுவாமி கோவிலில் நிறைப்புத்தரிசி விழா



சுசீந்திரம்.ஆக.4

நல்ல மழை வேண்டியும் விவசாயம் செழிக்க வேண்டிய மன்னர் ஆட்சி காலத்தில் இருந்தே தாணுமாலய சுவாமி கோவிலில் நிறை புத்தரிசிவிழா நடைபெற வழக்கம் அதுபோல இந்த ஆண்டு நிறைபுத்தரிசி விழாவிற்காகநேற்று அதி காலை வயல்களில் விளைந்த நெற்கதிர்களை அறுவடை செய்து மேள தாளங்கள் முழங்க தாணு மாலயா சுவாமி கோவில் அருகே உள்ள விநாயகர் கோவிலிற்கு முன்பு வைத்து பூஜைகள் செய்து பின்பு நெற்கதிர்களை தாணுமாலய சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களுக்குபடைத்துநிறைப்புத்தரிசி விழா நடைபெற்றது பின்பு வருகை புரிந்த பக்தர்களுக்கு நெற்கதிர்களை பிரசாதமாக வழங்கினர்

## தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமி சார்பில்

# மாவட்ட அளவிலான யோகா போட்டியில் அசத்திய மாணவர்கள்



கோவை ஆக:04

மகிழ்ச்சியான வாழ்வியலுக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் யோகா இன்றியமையாதது என்பதை உணர்த்தும் விதமாக மாவட்ட அளவிலான யோகா போட்டி ஒவ்வொரு வருடமும் தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது,இதன் தொடர்ச்சியாக இந்த வருடம் கோவை பேரூர் பகுதியில் தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமியின் நிறுவனர் சதீஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மேற்கண்ட இந்தபோட்டியில் கோவை மாவட்டத்திலிருந்து சுமார் 20க்கும் மேற்பட்ட பள்ளியில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர், காமன், ஸ்பெஷல் என்ற பிரிவுகளின் கீழ் நடைபெற்ற இந்த போட்டியில் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு சிறப்பாக யோகா செய்து அசத்தினர்.

# குமரி அரசு மருத்துவமனைகளில் கோரிக்கை அட்டை அணிந்து செவிலியர்கள் பணி செய்யும் போராட்டம்



நாகர்கோவில், ஆக. 4

தமிழ்நாட்டில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து 210 செவிலியர் பணியிடங்களை செவிலியர் தட்டுப்பாடு உள்ள அரசு மருத்துவமனைக்கு மறுப்பணியமர்வு செய்யப்படுகிறது. இந்த பணியிடங்கள் அனைத்தும் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் ஆகும்.

ஆனால் புதிய பணியிடங்கள் எதுவும் தோற்றுவிக்காமல் இருக்கும் செவிலியர்களை வைத்து அரசு மருத்துவமனைகளை நடத்த நினைக்கும் தமிழக அரசை கண்டித்தும், உடனடியாக புதிய செவிலியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் பல்வேறு கட்ட போராட்டங்கள் நடக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக நேற்று கோரிக்கை அட்டை அணிந்து பணியாளர்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் பங்கேற்ற அரசு செவிலியர்கள் கோரிக்கை அட்டையில் அணிந்து பணிக்கு வந்தனர்.

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3 சுற்றுகளில் பணியாற்றிய அனைத்து செவிலியர்களும் கோரிக்கை அட்டை அணிந்திருந்தனர். தக்கலை மாவட்டதலைமை அரசுமருத்துவமனை உள்பட அனைத்து மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்த போராட்டம் நடைபெற்றது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்வுநாள் கூட்டம்

## மாவட்ட ஆட்சியர் பொதுமக்களிடமிருந்து 228 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்



திருப்பத்தூர்:ஆக:4

திருப்பத்தூர் மாவட்டம் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 08 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.96,325/ மதிப்பிலான அரசு நலத்திட்டஉதவிகளைமாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முதன்மைதிட்டமான உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் வரபெற்ற மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என அனைத்துத்துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார். மேலும் வருவாய் துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித் துறை, வனத்துறை, நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப்பட்டா, முதியோர்உதவித்தொகை, கூட்டுறவு கடனுதவி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சார்பாக வீடுகள் வேண்டி, மின்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள், மருத்துவத்துறை, கிராம பொதுப்பிரச்சனைகள், குடிநீர் வசதி மற்றும் பொது நலன் குறித்த மனுக்கள் என மொத்தம் 228 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.14,500/ மதிப்பிலான கைத்திறன் பேசியும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.6,359/ மதிப்பிலான தையல் இயந்திரமும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,750/ மதிப்பிலான சக்கர நாற்காலியும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.9,000/ மதிப்பிலான (Commode Wheel Chair), 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.7,216/ மதிப்பிலான (Corner Chair) எனமொத்தம் 08 நபர்களுக்கு ரூ. 96 ஆயிரத்து 325/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள. தமிழரசி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், உதவி இயக்குநர்கள் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், (வடக்கு) முருகன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




நாளை மறுநாள் 05.08.2026 அன்று சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோவில் திருவிழா நடைபெறுவதால் முன்னேற்பாடுகள் குறித்து சேலம் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் ஆய்வு மேற்கொண்டார்.

# தமிழக மக்காச்சோள விவசாயிகளுக்கு கோத்ரேஜ் அக்ரோவெட்டின் இரட்டை பாதுகாப்பு

## அஷிடாகா, டக்காய் மூலம் மகசூல் மேம்பாட்டுக்கு புதிய ஊக்கம்




தமிழக மக்காச்சோள விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு ஆதரவை மேலும் வலுப்படுத்தும் வகையில், கோத்ரெஜ் அக்ரோவெட் நிறுவனம் தனது அஷிடாகா மற்றும் டக்காய் (TAKAI) பயிர் பாதுகாப்புத் தீர்வுகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. கடந்த ஆண்டு வெற்றிகரமாக அறிமுகமான இந்த இரண்டு தயாரிப்புகளும், மக்காச்சோளத்தில் களை மற்றும் Fall Armyworm (படைப்புழு) தாக்குதலை கட்டுப்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கு உதவுகின்றன

தமிழ்நாட்டில் மக்காச்சோள சாகுபடி பரப்பளவு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ஆரம்ப வளர்ச்சி நிலையில் களைகளின் போட்டி மற்றும் படைப்புழு தாக்குதல் காரணமாக மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இந்த சவால்களுக்கு அறிவியல் அடிப்படையிலான தீர்வுகளை வழங்குவதே கோத்ரெஜ் அக்ரோவெட்டின் நோக்கமாகும்.

இந்தியாவில் மக்காச்சோள சாகுபடி பரப்பளவில் நாடு உலகளவில் நான்காவது இடத்திலும், உற்பத்தியில் ஐந்தாவது இடத்திலும் உள்ளது. தமிழ்நாட்டில் சுமார் 13.3 லட்சம் ஏக்கரில் 33 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் மதுரை மண்டலத்தில் மட்டும் 4 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.

இதுகுறித்து கோத்ரெஜ் அக்ரோவெட்டின் Crop Care Business பிரிவின் தலைமை செயல் அதிகாரி என்.கே. ராஜவேலு கூறுகையில், மக்காச்சோளத்தின் முழு மகசூல் திறனைப் பெற சரியான நேரத்தில் களை மற்றும் பூச்சி மேலாண்மை அவசியம் என்றும், அஷிடாகா மற்றும் டக்காய் ஆகியவை ஆராய்ச்சி அடிப்படையிலான பயிர் பாதுகாப்புத் தீர்வுகளை வழங்கி விவசாயிகளின் உற்பத்தித் திறனை உயர்த்த உதவுகின்றன என்றும் தெரிவித்தார்.

அஷிடாகா என்பது மக்காச்சோளத்திற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட களைக் கொல்லியாகும். புல்வகை மற்றும் அகன்ற இலைக் களைகளை கட்டுப்படுத்த இது உதவுகிறது. களைகள் 2–4 இலை நிலையில் இருக்கும் போது, 50 மி.லி./ஏக்கர் அஷிடாகா மற்றும் 400 மி.லி./ஏக்கர் சர்ஃபாக்டன்ட் சேர்த்து பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

டக்காய் (TAKAI) என்பது ISK Japan நிறுவனத்தின் Cyclapryn™ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புழுக்கொல்லியாகும். மக்காச்சோளத்தில் விதைத்த 10–15 நாட்களில் முதல் முறையும், 30–35 நாட்களில் இரண்டாவது முறையும், 160 மி.லி./ஏக்கர் அளவில் பயன்படுத்தலாம். இது படைப்புழுவின் உணவெடுப்பை விரைவாகத் தடுத்து, நீண்ட கால பாதுகாப்பை வழங்கி மகசூலை பாதுகாக்க உதவுகிறது.

களை மேலாண்மைக்கு அஷிடாகாவும், படைப்புழு கட்டுப்பாட்டுக்கு டக்காயும் இணைந்து செயல்படுவதன் மூலம், மக்காச்சோள விவசாயிகள் பயிர் இழப்பைக் குறைத்து, சீரான மற்றும் அதிக உற்பத்தியைப் பெற முடியும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.



# குற்றாலத்தில் டால்மியா பாரத் சிமெண்ட் நிறுவனம் சார்பில் கட்டிட கலைஞர்களை கவுரவித்து ஊக்கப்படுத்தும் விழா

தென்காசி, ஆகஸ்ட்.04

சிமெண்ட் நிறுவனங்களில் ஒன்றான டால்மியா பாரத் சிமெண்ட் நிறுவனம் தங்களது நிறுவனப் பொருட்களை வாங்கும் கட்டிடக் கலைஞர்களை கவுரவிக்கும் விதமாக 6 மாதத்திற்குஒருமுறைஅனைத்து மாவட்டங்களிலும் உமாங் உத்சவ் என்னும் மகிழ்ச்சி விழாவை நடத்தி கட்டிட கலைஞர்களை ஊக்கப்படுத்தி வருகிறது.

இதே போன்று தென்காசி மாவட்டத்தில் டால்மியா பாரத் சிமெண்டை உபயோகப்படுத்தும் கட்டிட பொறியாளர்கள், கான்ட்ராக்டர்கள், கட்டிடக் கலைஞர்கள் ஆகியோரை கவுரவித்து ஊக்கப்படுத்தி பரிசு பொருட்கள் வழங்கும் விழா தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள எலைக்ட் மஹாலில் வைத்து தென்காசி மாவட்ட உமாங் விழா நடைபெற்றது. இதில் கட்டிட கலைஞர்களுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டி கள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு களும் வழங்கப்பட்டன. விழாவில் அனைத்து கட்டிடக்கலைஞர்களுக்கும் தாங்கள் உபயோகித்த சிமெண்ட் மூடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப டிவி, பிரிட்ஜ், வாஷிங் மெஷின் போன்ற பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக டால்மியா சிமெண்ட் நிறுவனத்தின் தென் தமிழக விற்பனை பிரிவு பொது மேலாளர் சரவணன் பங்கேற்று கட்டிட கலைஞர்களுக்கும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற சாதனையாளர்களுக்கும் பரிசுப் பொருட்களை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடக் கலைஞர்கள், விற்பனை முகவர்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை டால்மியா பாரத் சிமெண்ட் நிறுவனத்தின் தென்தமிழக பொறுப்பாளர்கள் செய்திருந்தனர்.

# தீரன் சின்னமலை கவுண்டர் 221 வது நினைவு நாள் தினம் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது



திருப்பூர்:ஆக04

கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி சார்பாக திருப்பூர் மாநகராட்சி அருகில் தீரன் சின்னமலை கவுண்டர் 221வது நினைவு நாள் தினம் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், சென்னிமலை அருகிலுள்ள செ. மேலப்பாளையம் என்னும் சிற்றூரில் ஏப்ரல் 17, 1756 அன்றுபிறந்தார். இவரின் தந்தையார் ரத்னசாமி கவுண்டர் (பயிரன் கூட்டம்), மற்றும் தாயார் பெரியாத்தா (ஓதாலன் கூட்டம்) ஆகியோர் ஆவர். இவரின் இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர் ஆகும். இவர் பழைய கோட்டைப் பட்டக்காரர் மரபு என்று கூறப்படுகிறது. இதனால் இவர் இளம்பருவத்தில் தீர்த்தகிரிச் சர்க்கரை எனப் பெயர் பெற்றார். தீர்த்தகிரி இளவயதிலேயே மல்யுத்தம், தடிவரிசை, வில்பயிற்சி, வாள்பயிற்சி, சிலம்பாட்டம், போன்ற போர்ப் பயிற்சியை சிவந்தாரையர் என்பார் வழிவந்தவரிடம் கற்றுத் தேர்ந்தார். இந்தியாவுக்குவியாபாரம் செய்ய வந்தபிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் கொஞ்சம் கொஞ்சமாக நாட்டில் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்க வேண்டும் என்று சின்னமலை விரும்பினார். இன்றைய கேரளத்திலும், கொங்கு நாட்டின் சேலம் பகுதியிலும் இருந்த கிழக்கிந்திய கம்பெனிப்படை ஒன்று சேரா வண்ணம் இடையில் பெரும் தடையாகச் சின்னமலை விளங்கி னார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் பாலசுப்பிரமணியம், தெற்கு மாவட்ட செயலாளர் வேலுமணி தலைமையில், மாவட்ட தொழிற்சங்க செயலாளர் கொங்கு சந்தோஷ், பேரவை தலைவர் கோல்டன் சண்முகம், செல்வி ஜெராக்ஸ் மணி மாறன், மாவட்ட தொண்டரணி செயலாளர் கார்த்திகேயன், நல்லூர் பகுதி செயலாளர் பிரகாஷ், மற்றும் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்..

# மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தில் ஒரு இஸ்லாமியருக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என கோரிக்கை

## இந்திய ஹஜ் சங்கத்தலைவர் அபுபக்கர் பேட்டி




சென்னை செல்வதற்காக மதுரை விமான நிலையம் வருகை வந்த இந்திய ஹஜ் சங்கத் தலைவர் அபுபக்கர் செய்தியாளர்களை சந்தித்து பேட்டி வைத்தார்.,

அதில் 2026ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரை மிகச் சிறப்பாக நடைபெற்றதாகவும், அதற்காக இந்தியாவுக்கு சவுதி அரேபிய அரசு இரண்டு விருதுகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். இதற்காக சவுதி அரசுக்கு நன்றி தெரிவித்த அவர், 2027ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரையும் தடையின்றி சிறப்பாக நடைபெறும் என்றார்.

2027ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணிகளின் தேர்வு செயல்முறை நிறைவடைந்துள்ளதாகவும், காத்திருப்பு பட்டியலில் இருப்பவர்களுக்கு காலியாகும் ஒதுக்கீடுகளின் அடிப்படையில் வாய்ப்பு வழங்கப்படும் என்றும் கூறினார்.

தனியார் மூலம் ஹஜ் செல்ல விரும்புபவர்கள், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் ஹஜ் டூர் ஆபரேட்டர்களை மட்டுமே அணுகி பதிவு செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும், 2027ஆம் ஆண்டு அரசு மூலம் ஹஜ் செல்லும் சுமார் 1.25 லட்சம் பயணிகளுக்கு சவுதி அரசே குறைந்த கட்டணத்தில் மூன்று வேளை உணவு வசதியை வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகவும், இது ஹஜ் பயணிகளுக்கு முக்கியமான சிறப்பம்சமாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அதே நேரத்தில், மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்த அபுபக்கர், நாட்டில் சுமார் 40 கோடி இஸ்லாமியர்கள் வாழும் நிலையில், மத்திய அமைச்சரவையில் தற்போது ஒரு இஸ்லாமிய கேபினட் அமைச்சர் கூட இல்லாதது வருத்தமளிப்பதாக கூறினார்.

குலாம் நபி ஆசாத், ஷாநவாஸ் ஹுசைன், முக்தார் அப்பாஸ் நக்வி போன்றோர் முன்பு அமைச்சரவையில் இடம் பெற்றதை நினைவுகூர்ந்த அவர், விரைவில் நடைபெற உள்ள அமைச்சரவை விரிவாக்கத்தில் ஒரு இஸ்லாமியருக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்பது இந்திய ஹஜ் சங்கத்தின் கோரிக்கை என தெரிவித்தார்.

மேலும், ஹஜ் ஒப்பந்தங்கள் உள்ளிட்ட சர்வதேச நிகழ்வுகளில் இஸ்லாமிய அமைச்சர் இருப்பது நடைமுறை ரீதியாகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும், மக்கா போன்ற புனித நகரங்களுக்கு முஸ்லிம்கள் மட்டுமே செல்ல முடியும் என்பதால், இது சர்வதேச அளவிலும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் வலியுறுத்தினார். இதனை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் செய்தியாளர் சந்திப்பு வாயிலாக கோரிக்கை விடுத்தார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .த.மஞ்சுளா, உதவி ஆட்சியர்.பயிற்சி. .சாய்சைதன்யா ஜாதவ் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்.பொது. .முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், தனித்துணை ஆட்சியர்.சமூக பாதுகாப்பு திட்டம். .அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# சிபிஐ விசாரணை கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு



கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி அருகே உள்ள பாலகுறி கிரமத்தை தேர்ந்த இந்திய ராணுவ வீரர்ம கேஷ்குமார் மற்றும் இவரது தந்தை முன்னாள் இந்திய இராணுவ வீரரான செல்லப்பா ஆகிய இருவரையும் மகேஷ் குமாரின் மனைவி பானுபிரியா மற்றும் அவளது கள்ள காதலன் பூவரசன ஆகிய இருவரும் கடந்த மே மாதம் மகேஷ் குமார் மற்றும் அவரது தந்தை செல்லப்பா ஆகிய இருவரையும் வீட்டில் கொலை செய்து உடலை தூக்கி சென்று அருகில் உள்ள வனப்பகுதியில் எரித்து கொலை செய்யப்பட்ட வழக்கில் பானுபிரியா மற்றும் அவளது கள்ள காதலன் பூவரசன் ஆகிய இருவரையும் போலிசார் கைத செய்து மத்திய சிறையில் அடைத்துள்ளனர்.

இந்த நிலையில் கொலை செய்ய ப்பட்ட மகேஷ்குமாரின் தாயார் காளியம்மாள் மற்றும் உறவினர்கள் கொலை செய்தது மட்டுமின்றி பானுபிரியாவின் உறவினர்கள் எங்களை அடியாள்கள் மூலம் கொலை மிரட்டல் விடுத்து வருவதாகவும், இரட்டை கொலை வழக்கை சி.பி.ஐ, க்கு மாற்றம் செய்திட வழியுறுத்தி மகேஷ் குமாரின் தாயார் காளியம்மாள் மற்றும் சகோதரிகள் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமாரை சந்தித்து கண்ணீருடன் புகார் மனுவை கொடுத்தனர்.

இதனைத் தொடந்து மகேஷ்குமாரின் உறவினர்கள் கடந்த மே மாதம் எனது அண்ணன் மகேஷ் குமார், மற்றும் எனது தந்தை செல்லப்பா ஆகிய இருவரையும் கொலை செய்து அருகில் உள்ள வனப்பகுதிக்கு கொண்டு சென்று எரித்துள்ளன. இந்த இரட்டை கொலை சம்பவத்தில் தொடர்ப்புடைய மகேஷ் குமாரின் மனைவி பானுபிரியா மற்றும் அவரது கள்ளக்காலன் பூவரசன் ஆகியோரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர் மேலும் இந்த இரட்டை கொலை வழக்கு இன்னும் பலர் சம்மந்தப்பட்டு உள்ளனர் இவர்கள் அடிக்கடி எங்களை மிரட்டி வருவதோடு கொலை மிட்டலும் விடுத்து வருகின்றனர், இதனால் எங்களால் வீடடைவிட்டுவெளியே வர முடியாத நிலை உள்ளது ஆகையால் இந்த இரட்டை கொலை வழக்கில் இன்னும் பலர் சம்மந்தப்பட்டுள்ளவர்கள் மீது காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட சம்மந்தப்பட்டவர்கள் மீது புகார் மனுக்கள் கொடுத்தும் இது வரை எந்த பயனும் இல்லை இதனால் மாவட்ட ஆட்சியரை சந்தித்து இரட்டை கொலை வழக்கில் மேலும் தொடர்புடைய குற்றவாளிகளை பிடிக்க இந்த வழக்கை சி.பி.ஐக்கு மாற்றம் செய்திட வேண்டும் என்று வழியுறுத்தினர்.

# மோட்டார் சைக்கிள், பழைய கார்கள் வாங்க கடன் உஜ்ஜீவன் ஸ்மால் பைனான்ஸ் வங்கி அறிமுகம்

சென்னை, ஆகஸ்ட் 04

உஜ்ஜீவன் ஸ்மால் பைனான்ஸ் வங்கி, மோட்டார் சைக்கிள் மற்றும் பழைய கார்களுக்கு கடன் வழங்கும் தனது வாகனக் கடன் சேவையை சென்னையில் அறிமுகப்படுத்தி உள்ளது.

வங்கியின் பாதுகாப்பான கடன் சேவைகளை வலுப்படுத்தும் அதே வேளையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களின் வாகனக் கனவுகளை நிறைவேற்றும் விதமாக இந்த கடன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக இவ்வங்கி தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் சொந்த வாகனங்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. மாதச் சம்பளம் பெறுபவர்கள், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் செய்பவர்கள் எனப் பல்வேறு தரப்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள சென்னை, தமிழ்நாட்டின் வாகனச் சந்தைகளில் முக்கியமான ஒன்றாகத் திகழ்கிறது. இங்கு இருசக்கர வாகனங்கள் மற்றும் பழைய கார்களுக்கான தேவை அதிக அளவில் உள்ளது.

வாடிக்கையாளர் சேவையை அதிகரிக்கவும், நகரத்தில் உள்ள வாகன விற்பனையாளர்களுடன் நல்லதொரு கூட்டாண்மையை ஏற்படுத்தவும், வேளச்சேரி, அண்ணா நகர், போரூர், தாம்பரம், தி.நகர், பெரம்பூர், முகப்பேர், மயிலாப்பூர் மற்றும் அடையாறு உள்ளிட்ட சென்னையில் உள்ள தனது 9 கிளைகள் மூலம் இந்த கடன் வசதியை வங்கி வழங்க உள்ளது.

இந்த அறிமுகம் குறித்து உஜ்ஜீவன் ஸ்மால் பைனான்ஸ் வங்கியின் வாகனக் கடன் பிரிவின் வணிகத் தலைவர் பிரேம்குமார் கூறுகையில், 'வாகனங்களுக்கான சிறப்பான சந்தை மற்றும் சொந்த வாகனங்களுக்கான தேவை அதிகரித்துள்ள சென்னை, எங்களது வாகனக் கடன் வணிகத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பை வழங்குகிறது. வலுவான கிளை நெட்வொர்க் மற்றும் டீலர் கூட்டாண்மையுடன், சென்னையில் இருசக்கர வாகனம் அல்லது பழைய கார் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு எளிதான, வெளிப்படையான மற்றும் அவர்களது தேவைக்கேற்ற கடன்களை விரிவுபடுத்த எங்கள் வங்கி தயாராக உள்ளது என்று தெரிவித்தார்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027, வீடுவீடாக கணக்கெடுக்கும் (ஹவுஸ் லிஸ்டிங் ஆபரேஷன்ஸ் ) பணி நடைபெற்று வருவது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .த.மஞ்சுளா, உதவி ஆட்சியர் (பயிற்சி) .சாய்சைதன்யா ஜாதவ்., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், வட்டாட்சியர் (பேரிடர் (ம) மேலாண்மை) .வெங்கடேசன் உள்ளிட்ட பலர் இருந்தார்கள் .

# திருவள்ளூர் புதிய பேருந்து நிலையம் இம்மாதம் 10ம் தேதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என மாவட்ட கலெக்டர் தகவல்

திருவள்ளூர் ராஜாஜி சாலையில் தற்போது செயல்பட்டு வரும் திரு. வி.க., பேருந்து நிலையம் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது. அப்போதைய போக்குவரத்து வசதிக்கு ஏற்ப பேருந்து நிலையம் கட்டப்பட்டது.

தற்போது மாவட்ட தலைநகராக இருப்பதாலும் ஏராளமான குடியிருப்புகள் உருவாகி இருப்பதாலும் திருவள்ளூர்அசுரவளர்ச்சி அடைந்துள்ளது. பள்ளிகள், வணிக நிறுவனங்கள் தொழிற்சாலைகள் அதிகரிப்பால் நகரில் போக்குவரத்தும் அதிகரித்து விட்டது.

இந்நிலையில் செயல்பட்டு வரும் திரு.வி.க., பேருந்து நிலையம் அரை ஏக்கருக்கும் குறைவான இடத்தில் இருந்து சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, பெரியபாளையம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி மற்றும் ஆந்திர மாநிலம் திருப்பதி, காளஹஸ்தி, கர்நாடக மாநிலம் பெங்களூரு போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் தி னமும் நூற்றுக்கணக்கான பேருந்துகள் இயக்கப்படும் நிலையத்தில் ஒரே நேரத்தில் 10 பேருந்துகள் மட்டுமே நிறுத்த முடியும். இதனால் கடும் நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

இதையடுத்து, 2019ம் ஆண்டு திருவள்ளூர் ஊத்துக்கோட்டை சாலை வேடங்கிநல்லூரில் 36 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு தேர்தல் அறிவிப்பு வெளியாக இருந்ததால் பணிகள் முழுதுமாக முடிவதற்கு முன்னரே பேருந்து நிலையத்தை கடந்த மார்ச் 4ம் தேதி அப்போதைய முதல்வர் அவசரம் அவசரமாக காணொளி மூலம் திறந்து வைத்தார்.

ஆனால் மீதம் உள்ள கட்டுமான பணிகளையும் முடித்து இம்மாதம் 10ம் தேதி முதல் அனைத்து பகுதிகளுக்கு செல்லும் பேருந்துக்களும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மட்டுமே இயக்கப்படும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படாது என மாவட்ட கலெக்டர் ச. கவிதா தெரிவித்துள்ளார்.

# தமிழகத்துக்கு உரிய தண்ணீரை கர்நாடக அரசு வழங்க கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 4

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தஞ்சாவூர் தலைமை தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெ ற்றது

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சக்திவேல் தலைமை தாங்கினார் மாவட்ட துணை செயலாளர் ராமச்சந்திரன் மாவட்ட பொருளாளர் பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

காவிரி ஆற்றின் குறுக்கே மேக தாதுவில் கர்நாடக அரசு அணைக் கட்ட மத்திய அரசு அனுமதி அளிக்கக்கூடாது. தமிழகத்திற்கு உரிய தண்ணீரை கர்நாடக வழங்க வேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்தது நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வே று கோரிக்கைகள் வலியுறுத்தியும் நாடாளுமன்றத்தில் மத்திய நீர்வள த்துறை மந்திரி காவிரி பிரச்சனை தமிழ்நாட்டில் உரிமைகளை பறிக்கி ன்ற வகையில் பேசியதை கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன

இதில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் இடைக்குழு செயலாளர் சந்திரகுமார், பாலசுந்த ரம், பக்கிரிசாமி, பாஸ்கர் சேவையா ,விஜயலட்சுமி, கண்ணகி, முகில் உள்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவில் மாநகர செயலாளர் முத்துக்குமரன் நன்றி கூறினார்.

## அறிவிப்பு

நான் இந்திய ராணுவத்தில் பணியாற்றி வருகிறேன் எனது **ARMY NO:F524567** ஆகும். என்னுடைய **ARMY** அலுவலகத்தில் எனது தந்தை மற்றும் தாய் ஆகியோரின் பிறந்த நாள் தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது.தற்போது எனது ஆர்மி அலுவலகத்திற்கு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆதார் மற்றும் பேன் கார்டுகளில் உள்ள எனது தந்தை T.மனோகரனின் பிறந்தநாள் 12/12/1962, எனது தாயார் T.தங்க லெட் 01/06/1964 எனவும் சரியாக உள்ளது. எனது தந்தை மற்றும் தாய் ஆகியோரின் முந்தைய பிறந்தநாள் பதிவுகளை நீக்கிவிட்டு ஆதார் மற்றும் பான் கார்டுகளில் உள்ள பிறந்தநாள்கள் சரியாக இருப்பதால் அதனை ஏற்றுக் கொண்டு பதிவு செய்வதாகும்.

M. **விஜின்** S/O **மனோகரன்**
(ARMY NO:F524567)
**எட்டாமடை, அழகிய பாண்டிபுரம்,**
**கன்னியாகுமரி மாவட்டம்**
**9488847475**

## அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், பெத்தூர் கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.சுமதி க/பெ.குமார் என்பவர், கடந்த 27.07.1990 அன்று தனது தாயார் திருமதி. ராணி க/பெ.மாணிக்கம் என்பவர் இறந்ததை கால தாமதமாக பதிவு செய்ய விண்ணப்பம் செய்துள்ளார். இது தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்விளம்பரம் கண்ட 15 தினங்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி அவர்களிடம் நேரில் எழுத்து மூலம் தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில் மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

**மனுதாரர்**
**சுமதி**

# கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆடி மாத நிறை புத்தரசி பூஜை



கன்னியாகுமரி, ஆக.4

பிரசித்தி பெற்ற கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் நடைபெறும் ஆடி மாத நிறைபுத்தரிசி பூஜை மட்டும் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கவடியார் அரண்மனை சார்பில் நிச்சயிக்கப்படும் தேதியில் நடைபெறும். நெற்பயிர்கள் செழித்தோங்கி அறுவடை அதிகரித்து நாடு செழிப்படைய வேண்டும் என்பதற்காக இந்த நிறைப்புத்தரிசி பூஜை நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டு ஆடி மாத நிறைப்புத்தரிசி பூஜை நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 5.30 மணி முதல் 6 மணி வரையிலான சுப முகூர்த்த வேளையில் நடைபெற்றது. அதிகாலையில் திருக்கோவிலுக்கு சொந்தமான வயல்களில் இருந்து நெற்கதிர்கள் அறுவடை செய்யப்பட்டு நெற்கதிர்கள் கன்னியாகுமரி மெயின் ரோட்டில் உள்ள அறுவடை சாஸ்தா கோவிலுக்கு கொண்டுவரப்பட்டு அங்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து நெற்கதிர்கள் மேளதாளம் முழங்க முக்கிய வீதியில் வழியாக கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, மூலஸ்தான மண்டபத்தில் உள்ள பகவதி அம்மன் முன் நெற்கதிர்கள் படைக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. சிறப்பு பூஜை முடிந்த பிறகு நெற்கதிர்கள் அம்மனுக்கு படைக்கப்பட்டு அந்த நெற்கதிர்கள் பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது.

இந்த நெற்கதிரை பக்தர்கள் தங்களது வீடுகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் கட்டி தொங்க விடுவார்கள். இவ்வாறு நெற்கதிர்களை கட்டி தொங்க விடுவதன் மூலம் அந்த ஆண்டு முழுவதும் செல்வ செழிப்பு ஏற்படும் என்பது ஐதீகம். மேலும் இந்த நெற்கதிர் மணிகளை வயலில் தூவினால் அந்த போகம் சாகுபடி செழித்தோங்கும் என்பதும் பக்தர்களின் நம்பிக்கை.

நிறைபுத்தரிசி வழிபாட்டுடன் கோவிலில் விஸ்வரூப தரிசனம், நிர்மால்ய பூஜை, சிறப்பு அபிஷேகம்,அலங்கார தீபாரதனை பூஜை, உச்சிக்கால பூஜை, தீபாராதனை நடைபெற்றது.

நிறைப் புத்தரிசி பூஜையை முன்னிட்டு பகவதி அம்மனுக்கு தங்க கவசம், வைர கிரீடம், வைரக்கல் மூக்குத்தி மற்றும் திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு சந்தன காப்பு அலங்காரத்துடன் அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பக்தர்களுக்கு நெற்கதிர்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் கு. ரவிகுமார்,பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், உதவி இயக்குநர்கள் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், (வடக்கு) முருகன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளனர்.

# நாகர்கோவில் இந்து கல்லூரியில் முதுகலை வணிக மேலாண்மை புதிய பாடப்பிரிவினை கலெக்டர் துவக்கி வைத்தார்




நாகர்கோவில், ஆக.4

நாகர்கோவில் பழமையான எஸ்.டி. இந்து கல்லூரி கலையரங்கில் முதுகலைவணிகமேலாண்மை புதிய பாடப்பிரிவு துவக்கப்பட்டது. இதை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று துவக்கி வைத்து மாணவ மாணவியர்களிடையே பேசியதாவது:

எஸ்.டி. இந்து கல்லூரி, ஒரு அரசு உதவி பெறும் கல்வி நிறுவனம் ஆகும். இது 1952ஆம் ஆண்டில், தன்னலமற்ற தனிநபர்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டு, எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக உயர்கல்விக்கு சேவையாற்றி வருகிறது. இக்கல்லூரி இரண்டு பிரிவுகளின் கீழ் செயல்படுகிறது. அரசு உதவி பெறும் பிரிவில் 12 இளங்கலைப் படிப்புகள் மற்றும் 10 முதுகலைப் படிப்புகளுடன், சுயநிதிப் பிரிவு 8 இளங்கலைப் படிப்புகள் மற்றும் 6 முதுகலைப் படிப்புகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் 3,500க்கும் மேற்பட்ட மாணவர்கள், 200 ஆசிரியப் பணியாளர்கள் மற்றும் 85 ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் உள்ளனர்.

இந்த வருடம் முதுகலை வணிக மேலாண்மை பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எம்.பி.ஏ மிக முக்கியமான ஒரு படிப்பு. நீங்கள் எல்லாரும் ஒரு புகழ்பெற்ற கல்லூரியில் சேர்ந்துள்ளீர்கள். தற்போது எம்.பி.ஏ பாடப்பிரிவில் 60 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. அது மகிழ்ச்சியான செய்தியாகும். அதேபோல், தொடங்கப்பட்ட முதல் வருடத்திலேயே இவ்வளவு ஒரு அபரிமிதமான வளர்ச்சி இருப்பதற்கு என்ன காரணம் என்றால், அந்தக் கல்லூரி வழங்கும் கல்வியின் தரமாகும். இக்கல்லூரியில் படித்தவர்கள் இஸ்ரோ வில்விஞ்ஞானிகளாகவும், இந்திய ஆட்சி பணியாளர்களாகவும், இந்தியாவின் உயர்பதவிகளிலும், தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிந்து கல்லூரிக்கு பெருமை சேர்ந்து வருகிறார்கள். அதைபோன்று நீங்களும் நன்றாக கல்வி பயின்று பெரிய ஆளுமைகளாக வர வேண்டும். என பேசினார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் முதுகலை வணிக மேலாண்மை பாடப்பிரிவில் சேர்ந்த மாற்றுத்திறன் மாணவன் முஷின் ஜாசீர் என்பவரின் கல்வி செலவினை கல்லூரி நிர்வாகம் ஏற்றுக்கொண்டதைத்தொடர்ந்து அதற்கான காசோலையினை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தென்திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி ஆட்சிக்குழுத்தலைவர் முனைவர் நாகராஜன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழக பேராசிரியர் முனைவர்.எஸ். மாதவன், முதல்வர் முனைவர் அய்யப்பன், இயக்குநர் முனைவர்.சிவகாமி, பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்துறை தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சு. முத்துசாமியின் முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருகின்ற 07.08.2026 தேதியில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் நினைவு தினத்தை அனுசரிப்பதை யொட்டி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது .இக்கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.